
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 ஜனவரி - 1998 இதழ் - 1




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

## முழுநேர ஊழியர் தேவை

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டு ஆராதித்து வரும் 60க்கும் அதிகமான அங்கத்தினர் களைக் கொண்ட கிறிஸ்துவின் சபைக்கு, ஆற்றலும், அனுபவமும், ஆத்துமபாரமும் கொண்ட ஊழியர் தேவை.

வேதாகமப் பள்ளியில் முறையாகப் பயின்றவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

தங்க இடமும், போதுமான உதவித் தொகையும் கொடுக்கப்படும்.

உடனே தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**கிறிஸ்துவின் சபை**

2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.

## ஆசானின் அறிவுரையில்...


1. ஜெபம் — 1
2. பெந்தெகொஸ்தே நாளும் பெந்தெகொஸ்துக்களும் — 9
3. உலக வீடியோ வேதாகமக் கல்லூரி (விளம்பரம்) — 14
4. பெண்கள் பகுதி - தாயின் வல்லமை — 15
5. ஏன் ஒரு கிறிஸ்தவன் ஆராதனை மற்றும் வேத வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்? — 17
6. ஒசியா தீர்க்கதரிசன புத்தகம் — 20
7. வேதாகமம் தேவனுடைய வசனமென்று நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டும்? — 21
8. ஆவியின் கனி - நீடிய பொறுமை — 24
9. பாதுகாப்பு — 28
10. தேவனின் எச்சரிப்பு — 31

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 JANUARY - 1998 Issue -1

ஆசிரியர் உரை

# ஜெபம்

"வார்த்தைகளைக் காட்டிலும் செயல்கள் சத்தமானது" என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதாவது, பேசும் காரியங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைக் காட்டிலும், செய்யும் செயல்களால் ஏற்படும் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பது அதன் பொருள். இன்னும், சொல்வதென்றால், வார்த்தைகளைக் காட்டிலும், செயல்களுக்குத் தான் செல்வாக்கும், வசீகரமும் உண்டு என்பது. ஆனால், உலகெங்கும் பிரபலமடைந்துள்ள இக்கூற்றை ஓட, ஓட விரட்டும் வல்லமை 'ஜெப வார்த்தைகளுக்கு' உண்டு. ஆம், உண்மையான ஜெபத்தின் மூலம் ஏறெடுக்கப்படும் வார்த்தைகள், மூன்றாம் வானம் வரை சென்று காரியம் சாதிக்கக் கூடியவை. ஜெபத்தின் மூலம், நடைபெற்ற அற்புதங்கள், நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஏராளம், ஏராளம். பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில், நாம் இவைகளை மனமாரக் கண்டு களிக்கலாம்.

எடுத்துக்காட்டாக, உங்களை அப்போஸ்தலர் நடபடிகள், 12-ம் அதிகாரத்திற்கு அழைத்துச் செல்கிறேன். அந்த நாட்கள் சபை வரலாற்றின் கறுப்பு நாட்கள். கிறிஸ்துவின் சபைக்கு எதிரான தாக்குதல், அப்பொழுது உச்ச கட்டத்தில் இருந்தது. ரோம அரசாங்கமும், யூத மதப் பித்தர்களும் சேர்ந்து கிறிஸ்தவர்களைப் படுத்திய கொடுமைகளுக்கு அளவும், எல்லையுமில்லை. ஒரு சமயம், யோவானுடைய சகோதரனை அநியாயமாய்க் கொன்று, அக்கொலையில் ருசி கண்ட ஏரோது, பேதுருவையும் பின் தொடர்ந்து பிடித்து, கொலைக்கு நாள் குறித்து, காவலில் வைத்தான். அந்நாட்களில்

ஊழியத்தைத் தலைமையேற்று நடத்தி வந்த பேதுருவுக்கு ஏற்பட்ட கதி கண்டு, கலங்கிப் போன சபையார், அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடு ஜெபம் பண்ணினார்கள் (அப். 12 : 1–5).

ஜெபத்தைக் கேட்டுப் பதிலளிக்கும் தேவன், பரிசுத்தவான்களின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு, பேதுருவை அற்புதமான முறையில் விடுவித்து சீடர்களிடம் கொண்டு வந்து சேர்த்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். (12 : 9, 16).

ஜெபத்தின் வல்லமையால் அந்த நாளில் என்னென்ன காரியங்கள் நடந்தது தெரியுமா? கவனியுங்கள். (I) காவலர்களின் கண்கள் கட்டப்பட்டது. (ii) வானத்திலிருந்து தூதன் இறங்கி வந்தான் (iii) ஒளி பிரகாசித்தது (iv) இரும்புச் சங்கிலிகள் தறிப்புண்டு போனது. (v) இரும்புக் கதவு தானாய் திறவுண்டது. (12:6–10) மொத்தத்தில் தடையாக இருந்த அனைத்தும் தவிடுபொடியானது.

இவ்வளவு, வல்லமை நிறைந்த ஜெபத்தின் மேன்மையும், இதுபற்றிய உண்மையும் தெரியாமல், கிறிஸ்தவ சமுதாயமும், உலகமும் தடுமாறிக் கொண்டுள்ளது. இது குறித்தான சில உண்மைகளை நாம் அறிந்து கொள்வோம்.

பெதுவாக “ஜெபம்”, “விண்ணப்பம்”, “வேண்டுதல்” போன்றவை மனிதனுக்குள்ளாக இருக்கக் கூடிய இயற்கைச் சுபாவங்களில் ஒன்று. உலகத்திலே பிறந்து வாழும் எல்லா மனிதர்களும் கிட்டத்தட்ட தங்களை இக்காரியங்களில், ஏதாவது ஒரு கட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். தங்கள் தேவனை நோக்கி, அல்லது தங்களுக்குத் தெரிந்த தேவர்களை நோக்கி, அல்லது ஏதாவதொரு மேலான சக்தியிருக்கிறதென்று நினைத்து வேண்டுதல் செய்வர். இவைகளை நாம் காணும்போது, விண்ணப்பிப்பது மனிதனுடைய ஒரு இயற்கை சுபாவம் என்று அறியலாம். ஆகையால், மனிதனுக்கு ‘ஜெபம் செய்’, ‘விண்ணப்பம் செய்’ என்று யாரும் கட்டளையிடத் தேவையில்லை. ஏனெனில், கட்டளையில்லாவிட்டாலும், அவன் அதை செய்யத் தான் போகிறான்.

இருப்பினும், அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதில் மனிதனுக்குத் தெளிவு இல்லை. அவனவன் தான் அறிந்த வழியிலே செய்து, திருப்திபட்டுக் கொள்கிறான். அப்படிச் செய்வது தேவனை ஒருபோதும் பிரியப்படுத்தாது. அதுமத்திரமல்ல நாம் நம்முடைய விண்ணப்பத்தின் மூலம் எதிர்பார்க்கும் நன்மையும் கிடைக்காது. இது பற்றிய முழு உண்மையை ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஒன்றான மெய்த் தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்திற்கு அவன் செல்ல வேண்டும். வேதம் சொல்லுகிறதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், ஜெபம், விண்ணப்பம் போன்றவை தேவன் சம்பந்தப்பட்டது, தேவன் இவைகளைக் குறித்தான

தனது சித்தத்தை வேதாகமத்தில் தான் எழுதியுள்ளார். ஆகவே, இவை பற்றிய தீர்மானமான கருத்தை, போதனையைக் கொடுக்கும் எல்லா உரிமையும் அதிகாரமும் வேதாகமத்திற்கு மாத்திரமே உண்டு.

எனவே, வேதம் கொடுக்கும் உண்மைகள் சிலவற்றைக் கவனிப்போம்.

**முதலாவது,** ஜெபம் என்றால் என்னவென்று பார்ப்போம். வார்த்தைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு, பரலோகத்திலுள்ள தேவனிடம் ஏறெடுக்கப்படும் ஒரு "விண்ணப்பம்" அல்லது 'மன்றாட்டு' தான் ஜெபம் ஆகும். அநேகர் நினைப்பது போல், ஒரு மனிதனுடைய இருதயத்தின் எண்ணங்களும், விருப்பங்களும் ஜெபம் ஆகிவிடாது. எண்ணங்களும், விருப்பங்களும் வார்த்தைகளாக உருவாக்கப்பட்டு ஏறெடுக்கப்பட வேண்டும். இக்கருத்தை அப்போஸ்தலன் பவுல், உரோமையருக்கு எழுதின நிருபத்தில் வெளிப்படுத்தியுள்ளார் (ரோம. 10 : 1). மேலும், நற்செய்தி நூலில் இடம் பெற்றுள்ள இயேசுவின் எல்லா ஜெபங்களும் வார்த்தைகளைக் கொண்டே ஆக்கப்பட்டு, பரலோகத்தின் தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, நாம் எண்ணுவதும், நினைப்பதும், விரும்புவதும் ஒரு போதும் ஜெபம் ஆகாது.

**இரண்டாவதாக,** ஜெபம், வீண் வார்த்தைகளால் ஆக்கப்பட்ட தாகவோ அல்லது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிற தாகவோ இருக்கக்கூடாது. நாம், நமது வாழ்க்கையில் மரியாதைக்குரிய ஒருவரிடம் பேசும்போது, வார்த்தைகளை அளந்து நிதானமாக, நறுக்குத் தெறித்தாற் போல பேச விரும்புகிறோம். அப்படியானால், பக்திக்கும், பயத்திற்கும் உரியவரிடம் நம்முடைய அணுகுமுறை எப்படியிருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள்.

நமது இரட்சகர் இயேசுக் கிறிஸ்து, இது குறித்து தனது மலைப்பிரசங்கத்தில் சொல்லியுள்ளதை கவனியுங்கள். "அன்றியும், நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல, வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள், அதிக வசனிப்பினால், தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்" (மத். 6 : 7). இன்னும், சாலமோன் ராஜா தனது பிரசங்கி நூலில் கொடுக்கும் ஒரு எச்சரிப்பையும் கவனியுங்கள். "தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசா மலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால், உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" (பிர. 5 : 2) என்று.

அதற்கென்று, "இந்த சுருக்கமான ஜெபத்திற்குப் பெருக்கமான ஆசீர்வாதம் தாரும்" என்று நாலைந்து வார்த்தைகளோடு முடித்துக் கொள்வதா? பவுலடியார், கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் இதற்கு

எப்படி அழகாக தெளிவான விளக்கம் கொடுக்கிறார் பாருங்கள்". இப்படியிருக்க செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன். ." (I கொரி. 14 : 15). ஜெபங்கள் ஆவியோடும், கருத்தோடும் இருந்தால், அவைகள் ஒரு வேளை நீண்டு கொண்டு போனாலும் தேவனுக்குப் பிரியமானதே, தவறில்லை. ஏனெனில், இயேசு, "இராமுழுவதும் ஜெபித்துள்ளார்" என்பதற்கு ஆதாரம் உள்ளது.

இங்கே, ஆவியோடும் கருத்தோடும் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆம், அதிக சத்தமிட்டு அநாகரீகமாகவும், ஆக்ரோஷமாகவும் கத்துவது தான் "ஆவியின் ஜெபம்" என்று புது விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆனால், மெய்ப் பொருள் அதுவல்ல. முழுமையான விருப்பத்தோடும், மிகுந்த ஆர்வத்தோடும் நேர்மையான மன நிலையோடும் ஜெபிப்பதே ஆவியோடு ஜெபித்தல் ஆகும். கருத்தோடு ஜெபித்தல் என்றால், வேத வசனங்களில் போதனையின் படியேயும், வேத வசனங்களின் ஆதாரங்களின்படியேயும், அவை தரும் அதிகாரங்களின்படியேயும் ஜெபிப்பதாகும்.

ஆகவே, ஜெபங்கள் எப்பொழுதம் ஆவியோடும், கருத்தோடும் இருக்க வேண்டும்.

**மூன்றாவதாக,** யாருடைய ஜெபத்தை தேவன் கேட்கிறார்? என்பது. மாறுபட்ட கருத்துகளுக்கு இதில் பஞ்சமில்லை. ஆனால், இதில் குழம்புவதற்கோ அல்லது குழப்புவதற்கோ ஒன்றுமேயில்லை. தேவன் சொல்லுகிறதை யார் கேட்கிறார்களோ, அவர்களுடைய ஜெபத்தை தேவன் கேட்கிறார். அவ்வளவுதான். ஜெபிக்கிற எல்லோருடைய ஜெபத்தையும் கெட்கிறேன் என்று அவர் எங்குமே வாக்குக் கொடுக்கவில்லை. இயேசுவிடம் சுகம் பெற்ற ஒரு குருடனின் கூற்று உங்களுக்கு நினைவிருக்குமென நம்புகிறேன். "பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்" (யோவா 9 : 31) என்றுள்ளது.

அப்படியானால் யார் பாவி? கர்த்தருடைய சபைக்குப் புறம்பாக இருக்கிற அனைவரும் பாவிகளே என்ற பலமான ஒரு கருத்து உள்ளது. இக்கருத்தில் குறை காண எதுவுமில்லை. ஆனால், "ஜெபம்" விஷயத்தில் இதின் நிஜப் பொருளென்ன? கர்த்தருடைய சபைக்குப் புறம்பாக உள்ளவர்களின் ஜெபம் கேட்கப்படாது எனில், அப். 10-ம் அதிகாரத்தில் கொர்நெலியுவின் ஜெபம் கேட்கப்பட்டது எப்படி? அப்பொழுது அவன் சுவிசேஷத்தை அறியாதவனாகவும், இரட்சிப்பை அடையாதவனாகவும் தானே இருந்தான். அதுபோலவே, தர்சு

பட்டணத்து சவுல், தான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்று, அனனியா வந்து சொல்லும் வரை, மூன்று நாள் உபவாசத்திலும், ஜெபத்திலும் இருந்துள்ளான் என்று தானே வேதம் சொல்கிறது.

ஆகவே, இவைகளிலிருந்து, தேவனை நோக்கி, உண்மையான மனதுடன் ஜெபிக்கும் எந்த மனிதனுடைய ஜெபத்தையும் தேவன் கேட்பார் என்று நம்பலாம். ஆனால், அப்படிப்பட்ட ஜெபங்களுக்கு, தேவன் என்ன பதில் கொடுப்பார், எப்படிக் கொடுப்பார் என்பதெல்லாம் அவரைச் சார்ந்தது. அது பற்றி நமக்குத் தெரியாது. அவைகளுக்கு விளக்கம் கொடுக்க நாம் முற்பட்டால், பெருந்தவறுகள் ஏற்படும்.

அப்படியானால், தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்பதில்லையென்ற வசனங்களின் பொருள்தான் என்ன? கர்த்தருடைய சபைக்குள்ளாக இருக்கும் ஒருவரோ அல்லது கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படாத ஒருவரோ தேவன் சொல்வதற்கு முற்றிலும் மாறாக, வேத வசனங்களுக்கு நேர் எதிராக, தங்களுடைய நம்பிக்கைகளையும், செய்கைகளையும் அமைத்துக் கொண்டால், அவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் செவி கொடுக்கமாட்டார்.

**நான்காவதாக,** "ஜெபிக்கும் நிலை" எப்படியிருக்க வேண்டு மென்பது? இது குறித்து கொள்கைப் போராட்டங்கள் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், கருத்து வேற்றுமைகள் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

இது பற்றிய, வேதாகமத்தின் போதனையைப் பார்ப்போம். 'யோசபாத்' "நின்று" கொண்டு ஜெபித்தான். (II நாளா. 20 : 15), எஸ்றா "முகங்குப்புற விழுந்து" ஜெபித்தான் (நெகே. 8 : 6) என பழைய ஏற்பாடு சொல்கிறது. பரிசேயனும், ஆயக்காரனும் "நின்று" ஜெபித்ததாக இயேசு சொன்னார். (லூக் 8 : 11, 13). இயேசுவும், ஸ்தேவானும் "முழங்கால் படியிட்டு" ஜெபித்துள்ளனர். (லூக். 22 : 41, அப். 7 : 60).

உண்மையென்னவெனில், ஒருவன் ஜெபிக்கும் போது எப்படிப்பட்ட சரீர நிலையை மேற்கொள்ள வேண்டுமென்று வேதாகமம் எங்கும் போதிப்பதில்லை. ஆனால், ஒருவனின் மன நிலை எப்படியிருக்க வேண்டுமென்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இயேசுவின் ஜெபங்களை நாம் கூர்ந்து கவனித்தால் அவைகளில் பல அம்சங்கள் அடங்கியிருந்தது. ஒப்புக் கொடுத்தல் (மத். 26 : 39 –44) நம்பிக்கை (யோவா. 11 : 41, 42 ) நன்றி (மத். 11 : 25), ஆர்வம் (லுக். 22 :45) ஆகியன இருந்தது. ஆகவே, தேவன் மகா கனத்திற்குப் பாத்திரமானவர் என்பதை அறிந்து, மேற்சொன்ன மனநிலையோடு ஜெபிப்பது நன்மை தரும்.

ஐந்தாவதாக, ஜெபம் எப்பொழுதும் தேவ சித்தத்தை அடியொட்டியதாகவே இருக்க வேண்டும். பெரும்பாலும் நம்முடைய ஜெபங்கள், சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய விண்ணப்பிப்பதாகவும், நம்மைச் சேர்ந்தவர்களின் தேவைகள் நிறைவேற வேண்டும் என்பவைகளாகவுமே இருக்கிறது. இப்படிப்பட்ட ஜெபங்களில் தேவன் பிரியப்படமாட்டார்.

நம்முடைய தேவைகளுக்காக ஜெபிப்பதில் தவறேதுமில்லை. நம்முடைய காரியங்களுக்காக நாம் அவரிடம் தான் மன்றாட வேண்டும். ஆனால், அதுவே பிரதானமான, ஒட்டுமொத்த ஜெபமாக இருந்துவிடக் கூடாது. நம்முடைய தேவைகளை அவர் பொற்பாதத்தில் கொட்டி விட்டு, அவர் சித்தத்திற்கு காத்திருக்க வேண்டும். ஒன்று வேண்டுமென்று வற்புறுத்தி மீண்டும் மீண்டும் அதற்காக ஜெபிப்பது, நாம் தேவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும், அவர் நமக்கு வைத்திருக்கும் திட்டத்தையும், அவர் வெளிப்படுத்திக் கொடுத்துள்ள சட்டத்தையும் கேலிக்குரியதாக்கி விடும். ஒரு போதும் நாம் அப்படி செய்யக்கூடாது.

இதற்கு நல்ல உதாரணம் எண்ணாகம புத்தகத்தில் உள்ளது. இஸ்ரவேலரின் வனாந்திர யாத்திரையில், ஆரோனும், மிரியாமும் ஒன்று சேர்ந்து, மோசேக்கு விரோதமாக எழும்பினர். (12 : 12). இதினிமித்தம் தேவன் கோபங்கொண்டு மிரியாமை அடித்தார். அவள் குஷ்டரோகி யானாள். (12 : 10). தன் குஷ்டத்திற்காக மிரியாம் அங்கே, தேவனை நோக்கி ஜெபித்திருப்பாள். ஐயோ இப்படித் தவறு செய்து விட்டோமே என்று ஆரோன் புலம்பி மன்றாடியிருப்பான். அதுபோக, ஆரோனின் வேண்டுகோளுக்கு இணங்க, "மோசே, தேவனை நோக்கி, என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்". (12 : 13) யாருடைய ஜெபமும் கேட்கப்படவில்லை.

அங்கே, ஆரோன், மிரியாம் இவர்களின் ஜெபம் கேட்கப்பட வில்லையென்பது நமக்குப் புரிகிறது. ஆனால், மோசேயின் ஜெபமும் கேட்கப்படவில்லையென்பது, கவனிக்கப்படத்தக்கது. குஷ்டரோகி விஷயத்தில் என்ன செய்யப்பட வேண்டுமென தேவன், மோசேயைக் கொண்டு பிரமாணங்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அந்த சட்டங்களினபடி செய்வதுதான், அவருக்குக் கீழ்படிகிறவர்கள் செய்ய வேண்டியது. (லேவி. 14-ம் அதி) ஆனால், அதை விட்டுவிட்டு, என் சகோதரிக்காக உமது சட்டத்தைமாற்றும் என்று மோசே ஜெபித்தால் எப்படிக் கேட்பார்? கேட்கவே மாட்டார். அது மோசேயாக இருந்தால் என்ன? அல்லது வேறு யாராக இருந்தால் என்ன?

அவளை, பாளையத்துக்குப் புறம்பாக ஏழு நாள் வைத்து விட்டு, பிறகு சேர்த்துக்கொள் என்று கூறிவிட்டார், தேவன். அவள் நிமித்தம்

ஒட்டுமொத்த இஸ்ரவேலரின் பிரயாணம் "ஏழு நாள்' நிறுத்தப்பட்டது. அதன் பின்பே அவள் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். (எண். 12 : 14, 15) அவருடைய சட்டத்திற்கும், திட்டத்திற்கும் விரோதமாக காரியங்கள் நடைபெற வேண்டுமென ஜெபிப்பது வீண். பதிலும், பலனும் கிட்டாது.

**இறுதியாக,** "ஜெபம்" பற்றிய மிக முக்கியமான ஒன்றை நாம் தெரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், பிரிவினைச் சபையார்கள் இந்த இடத்தில் பெருந் தவறைச் செய்கின்றனர். அதாவது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு, ஜெபம் ஒரு மாற்று என எண்ணுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், தேவனிடம் ஜெபித்து, ஜெபத்தின் மூலமாகவே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று. ஆனால், இரட்சிப்பின் படிகளாகிய விசுவாசம், (மாற். 16 : 16) மனந் திரும்புதல், (அப். 2 : 38, 17 : 30) அறிக்கையிடுதல், (ரோம. 10 : 9, 10) ஞானஸ்நானம் (அப். 22 : 16) போன்றவற்றிற்கு ஜெபம் ஒருபோதும் மாற்றாகாது.

தேவன் யாருடைய பாவங்களையும் ஜெபத்தின் மூலம் மன்னிக்கமாட்டார். இல்லை, மன்னித்தார் என்று யாராவது சொல்வார்களானால், அது "கதை"யாகத்தானிருக்கும். இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டுமென்று வசனத்தில் தெளிவாக விளக்கி விட்டு, தான் சொன்ன வசனங்களுக்கு மாறாக, எப்படி ஒருவனை "ஜெபத்தின் மூலம்" இரட்சிப்பார்? தன்னுடைய வசனங்களுக்கு விரோதமாக அவர் செய்யக்கூடியவராக இருந்தால், மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, மிரியாமின் குஷ்டத்தைக் குணமாக்கியிருப்பார் தானே. ஏன் குணமாக்கவில்லை? நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஜெபத்தின் மூலம் ஒரு போதும் பாவங்கள், மன்னிக்கப்படாது.

ஒருவேளை, ஒருவன் கிறிஸ்துவின் ஒரே சபைக்குள்ளாக இருந்து, அதாவது, அவன் ஏற்கனவே இரட்சிப்பின் திட்டத்தின்படியாக, விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், ஞானஸ்நானத்தின் மூலம், பாவங்கள் கழுவப்பட்டவனாக இருக்கும் நிலையில், மீண்டும் பாவம் செய்ய நேர்ந்தால், அந்தக் குறிப்பிட்ட பாவத்திற்காக அல்லது பாவங்களுக்காக, உண்மையாகவே மனம் வருந்தி தேவனிடத்தில் ஜெபித்தால், அப்படிப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்படலாம் (அப். 8 : 22). மற்றபடி, ஒருவனின் கடந்த காலப் பாவங்கள் இரட்சிப்பின் திட்டத்தின் படியாகத் தான் இரட்சிக்கப்படும். ஜெபத்தின் மூலம் அல்ல. சந்தேகம் வேண்டாம்.

இன்னும் கொஞ்சம் கவனியுங்கள். இயேசு சிலுவையிலறையப் பட்ட போது, தன்னை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தவர்களுக்காய் ஜெபித்தார். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று. (லூக். 23 : 34) இயேசுவின் ஜெபத்தைக் கேட்டு, அந்தக் கொலைக் கும்பலின்

பாவங்களை தேவன் உடனடியாக மன்னித்தாரா? இல்லை. அவர்களில் அநேகர், இரட்சிக்கப்பட்டார்கள், என்பது உண்மை ஆனால், எப்பொழுது? ஐம்பது தினங்களுக்குப் பிறகு வந்த பெந்தெகொஸ்தே நாளில்.

ஆம், அந்நாளில் அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இரட்சிப்பின் திட்டம் வெளிப்படுத்தப்பட்டது. அதற்குத் தங்களைக் கீழ்ப்படித்தினார்கள். தங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்று அதன் பிறகே இரட்சிப்படைந்தார்கள். ஆகவே, ஒருபோதும் ஜெபத்தின் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படாது. ஜெபத்தை கேட்டு பாவங்களை தேவன் மன்னிப்பது உண்மையானால், ஏன் இயேசுவின் ஜெபம் கேட்டகப்படவில்லை? சிந்திப்போம். ஜெபம், ஒருபோதும், இரட்சிப்பின் திட்டத்துக்கு மாற்று ஆகாது.

எனதருமை நண்பரே! சகோதரனே! புத்தாண்டு பிறந்து இரண்டு மூன்று வாரங்கள் கடந்து போயுள்ளது. தேவனிடத்திலிருந்து, இந்தப் புதிய ஆண்டில் எத்தனையோ நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தோடு பிரவேசித்திருப்போம். நாம்யாவரும் தேவனிடத்திலிருந்து சரீர, ஆன்ம நன்மைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ள, உதவும்படியாகத்தான் இம்மாதத்தில், இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. “ஜெபம்” பற்றி ஒரு சில கருத்துக்களை மாத்திரம் இதிலே கொண்டு வந்துள்ளேன். ஒருவேளை, இதுகாறும் இத்தலைப்பில் நாம் தெளிவில்லாதவர்களாக இருந்திருப்போமானால் இன்றே தெளிவடைவோம்.

தேவன் ஜெபத்தைக் கேட்கிறவராக மாத்திரமல்ல, பதில் செய்கிறவராகவும் இருக்கிறார் என்பதை விசுவாசிப்போம். ஊழிய காரியங்களுக்காகவும் நம்முடைய எல்லாத் தேவைகளுக்காகவும் ஊக்கமாக ஜெபிப்போம். என்னுடைய ஜெபம் கேட்கப்படுமோ என்று நாம் யோசிக்கத் தேவையில்லை. எலியா நம்மைப்போல் பாடுள்ள மனுஷனாயிருந்து தான் ஜெபித்தார் என்றும் அவன் செய்த ஜெபம் கேட்கப்பட்டது என்றும் யாக்கோபு அப்போஸ்தலன் நமக்கு நினைவுபடுத்துகிறார். (யாக். 5 : 17, 18).

ஆகவே, நாமும் நம்முடைய வாழ்க்கையில், இப்புதிய ஆண்டில் ஜெபத்தின் உண்மையையும், வல்லமையையும் அறிந்து ஊக்கமாக ஜெபித்து, பரத்திலிருந்து நன்மைகள் பெற்று, இம்மையில் சுகமாகவும் சமாதானமாகவும் வாழ்வோம். மறுமையில் பரலோக பாக்கியத்தைப் பெறும் தகுதியையும் அதிகரித்துக் கொள்வோம்!.

**S. ராஜநாயகம்.**

# பெந்தெகொஸ்தே நாளும் பெந்தெகொஸ்துக்களும்

"பெந்தெகொஸ்தே" என்ற வார்த்தையின் பொருள் சரியாகத் தெரியாவிட்டாலும், கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள யாவருக்கும் இவ்வார்த்தை பரிச்சயமானதாயிருக்கும்.

அநேகர், இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்திலிருந்து இதைப் பிரித்தெடுத்து, இதை மையமாக வைத்து, வேதாகமத்தில் உபதேசிக்கப்படாத ஒரு கொள்கை மற்றும் பழக்கத்தை போதித்துக் கொண்டுள்ளனர்..

பெந்தெகொஸ்தே என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மட்டும் காணப்படுகிறது. இது பஸ்காவிலிருந்து ஐம்பதாவது நாளில் எப்பொழுதும் ஞாயிற்றுக்கிழமைகளில் வரும். யூதர்களின், வருடாந்திரப் பண்டிகைகளான பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, கூடாரப் பண்டிகை ஆகிய மூன்றில் பெந்தெகொஸ்தே பண்டிகை தான் மிகப் பிரபல்யமானது. இது அறுப்புகாலப் பண்டிகை என்றும் (யாத் 23 : 16) முதற்பலனின் பண்டிகை என்றும் (லேவி 23 : 17) வாரங்களின் பண்டிகை (உபா 16 : 10) என்றும் அறியப்பட்டிருந்தது. இப்பெயர்களில் குறிக்கப்பட்டிருக்கிறபடியே அறுவடை காலத்தின் இறுதியில் இப்பண்டிகை இருக்கும். இதைக் கொண்டாட உலகெங்கிலுமுள்ள யூதர்கள் எருசலேமுக்கு வந்து சேர்வார்கள்.

இந்த பெந்தெகொஸ்தே நாளைத்தான், தேவன், சபையின் பிறந்த நாளாகத் தெரிந்துகொண்டார்.

தான் போனபின்பு தன்னுடைய வேலை தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று, கிறிஸ்து அப்போஸ்தலர்களை தெரிந்துகொண்டு தன்னுடைய ஊழிய நாட்களில் அவர்களைப் பயிற்றுவித்தார். அவர்களின் அப்பணியில் எந்தத் தவறும் நேர்ந்துவிடக் கூடாதென்பதற்காக அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்று, அவரால் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட வேண்டுமென்பதற்காக, தேற்றரவாளனை வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். (யோவான் 14 : 26, 16 : 13) அவருடைய வல்லமையினாலே, இயேசு அவர்களுக்குப்

போதித்த யாவையும் நினைவுக்குக் கொண்டு வரவும், சத்தியத்தை மாத்திரம் போதிக்கவும், அந்நிய பாஷைகளில் பேசவும், அற்புதங்கள் செய்யவும், வருங்காரியங்களை முன் சொல்லவும் முடிந்தது. அந்நாட்களில், புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் இல்லாதபடியால், பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அவர்கள் செய்த அற்புதங்கள், அவர்களின் பிரசங்கங்களை தேவனுடைய வார்த்தைகளென்று உறுதி செய்து, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியும்படியாய், கேட்பவர்களின் இருதயங்களில் விசுவாசத்தை உண்டுபண்ண வேண்டியதாயிருந்தது.

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்குப் பிறகு, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை நீங்கள் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்று சீடர்களுக்கு கட்டளையிட்டார். (லூக் 24 : 49) அதன் பிறகு, அவர்கள், அவருடைய சாட்சிகளாக, எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், இறுதியாக. பூமியின் கடைசி பரியந்தமும் இருக்க வேண்டியதாயிருந்தது. (அப் – 1 : 8) இயேசு சொன்னார். ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும், நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென் (மத் 28 : 19, 20).

இவைகள் யாவும் சபையின் ஆரம்பத்திற்கான ஆயத்தங்கள். அந்தச் சபைதான் தேவனுடைய குடும்பமாகவும், இராஜ்ஜியமாகவும் பூமியில் உள்ளது. கிறிஸ்துவின் அறிவுரையின்படியே, அப்போஸ் தலர்கள் எருசலேம் பட்டணத்தில் கூடிவரவும். அவர் தம்முடைய ஆவியை அவர்கள் மீது ஊற்றவும். இரட்சிப்பின் சுவிசேஷம், முதல் முறையாகப் பிரசங்கிக்கவும் வேண்டியதாயிருந்தது.

ஆகவே, பஸ்காவின்பலியாக இயேசு சிலுவையிலறைப்பட்ட பிறகு வரும், முதலாவது பெந்தெகொஸ்தே நாளில், சபையானது ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்தநாள்தான் ஒரு சரியான நாள் ஆகையால் தான் நாம் இவ்விதமாகக் காண்கிறோம். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று, அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள்

அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.

தேவன் திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருந்தனர். அவர்களுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டிருந்தபடியே பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அதன் பயனாக, உலகெங்கிலுமிருந்து வந்திருந்தவர்களின் பாஷைகளில் பேசி, அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். அன்றைய தினம் 3000 பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து சபையில் சேர்க்கப்பட்டனர்.

ஆனால், இன்றைக்கு, பெந்தெகொஸ்தே நாளுக்கும், உலகத்துக்கும் என்ன இருக்கிறது? ஒருவேளை, யூதர்கள் அந்தநாளைப் பண்டிகை நாளாக இன்றும் கொண்டாடலாம். ஆனால், கிறிஸ்தவனுக்கும் அதற்கும் உள்ள உறவின் முக்கியத்துவம் இதுதான் 1) இந்த நாளில் தான் அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். 2) இந்த நாளில் தான் சுவிசேஷம் முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்டது. 3) இந்த நாளில் தான் சபையானது ஆரம்பமானது.

ஆனால், கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த பலர், தங்களை பெந்தகொஸ்துக்கள் என்று அழைத்துக் கொண்டு, பெந்தெகொஸ்தே அனுபவத்தைக் குறித்துப் பேசுவதை நாம் கேட்கிறோம். அவர்களில் அநேகர் பெந்தெகொஸ்தே என்றழைக்கப்படும் பிரிவைச் சேர்ந்தவர்கள். அசெம்பிளீஸ் ஆப் காட், நசரேயனின் சபை. பரிசுத்த சபை, சீலோவாம் சபை என்று வசீகரமான பெயருடைய கூட்டத்தார் தங்களை "பெந்தெகொஸ்துக்கள்" என்றழைத்துக் கொள்வர். பெந்தெகொஸ்தேயைப் பற்றி இன்னும் சில தெளிவாக்கப்பட வேண்டும்.

முதலாவது கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் விசுவாசிகளிடம் "சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு சபையானது ஸ்தாபிக்கப்பட தேவன் தெரிந்து கொண்ட நாளாக இது இருக்க நேர்ந்தது என்பதைக் காட்டிலும், இதற்கு வேறெந்த முக்கியத்துவம் இல்லை! இது யூதர்களுடைய பண்டிகை நாளே தவிர, கிறிஸ்தவர்கள் தங்களை அடையாளப்படுத்து வதற்கானதல்ல. இந்தநாள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தென்பதற்கான தர்க்கரீதியான காரணம் யாதெனில், பண்டிகை நாளுக்காக உலகெங்கிலுமுள்ள யூதர்கள் வந்து கூடுவர். மனமாற்றம் அடைய வாய்ப்புள்ள பெருங்கூட்டத்திற்கு சுவிசேஷம்

பிரசங்கிக்கப்படும் மற்றும் அந்நாள் முதல் கர்த்தரின் சுவிசேஷ வேலை உலகெங்கும் பரவலாகப் பரவத்துவங்கும் என்பது தான்.

கண்டிப்பாக "பெந்தெகொஸ்தே" என்பது அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய பிள்ளைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர் அல்ல. இந்த ஆரம்ப நாளுக்குப் பிறகு, அப்போஸ்தலர்களோ அல்லது கர்த்தருடைய பிள்ளைகளோ தங்களைப் "பெந்த கொஸ்துக்கள்" என்றோ "பெந்தகொஸ்தே சபையார்" என்றோ சொல்லிக் கொண்டதில்லை. மாறாக கிறிஸ்துவைப் பின்பற்றின ஒவ்வொருவரும் தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைத்துக் கொண்டனர். (அப். 11 : 26) சபையும், கிறிஸ்துவின் சபை என்றே அழைக்கப்பட்டது (ரோம 16 : 16).

அடுத்து அப்போஸ்தலர்கள் (அப் 2 : 1–4) கொர்நேலியும் அவன் வீட்டாரும் (அப் 10 : 11) மற்றும் அப்போஸ்தலர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ (அப் 6 : 1 –6) அவர்கள் தவிர, கிறிஸ்துவை விசுவாசித்தவர்களோ அல்லது தேவனுடைய பிள்ளைகளோ அற்புத வல்லமை தரும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார் களென்று நாம் வாசிப்பதில்லை. ஆகையால் இன்றைக்கு "பெந்தெகொஸ்துக்கள்" என்றழைத்துக் கொள்பவர்கள், பெந்தெ கொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்டதுபோல் நாங்களும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் என்று சொல்வார்களானால், அவர்கள் சொல்வது மகாபொய் ஆகும்! ஏனெனில் முதலாம் நூற்றாண்டில் நடந்ததுபோல், ஒருவரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்க முடியாது. ஆகவே அவர்களிடம் அற்புத வல்லமையும் இருக்காது. அப்போஸ்தலர் களைப்போல அவர்களால் அந்நிய மொழிகளில் பேச முடியாது. செத்தவர்களை உயிரோடு எழுப்ப முடியாது. அது மாத்திரமல்ல வெளிப்படுத்தப்பட்டதற்கு மாறான சுவிசேஷத்தை செய்கிறார்கள். பிரசங்கிக்கிறபடியால் அவர்கள் கண்டிப்பாகத் தவறு (கலா 1 : 6–9).

தங்களை, கிறிஸ்தவர்களென்று அழைத்துக் கொள்வதற்குப் பதிலாக பெந்தெகொஸ்துக்கள் என்றழைத்துக் கொள்வதே, அவர்கள் பரிசுத்த ஆவியினாலே வழிநடத்தப்படவில்லையென்பதற்கு பலமான சாட்சியாகும். பரிசுத்த ஆவியானவர் முதலாம் நூற்றாண்டில் நடத்தினதிற்கு மாறாக, இன்றைக்கு வேறு ஒரு பெயரில் தங்களை அழைத்துக் கொள்ளும்படியாய் உபதேசிக்கமாட்டார். "பெந்தெ கொஸ்துக்கள்" என்றோ "பெந்தகொஸ்தே" சபை என்றோ அவர்கள்

அழைக்கப்பட்டார்கள் என்று பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் நாம் வாசிக்க முடியாது என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

நிறைய மக்கள் தங்களிடத்தில் வல்லமை இருக்கிறதென்று நினைக்கின்றனர். அவர்கள் பெந்தெகொஸ்தே நாளை, வேதத்திற்குப் புறம்பான முறையில் உயர்த்துகிறார்கள், ஆகவே அவர்கள் ஏமாற்றப் பட்டு, இழந்து போகிறார்கள். நீங்கள் இந்தப் பெயரால் உங்களை அழைத்துக் கொண்டிருப்பீர்களானால், வேதாகமத்திற்குத் திரும்பும் படியாகவும், தேவனுடைய வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் படியாகவும், அதில் உள்ளதை மாத்திரம் செய்யும்படியாகவும் நாங்கள் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். அவருடைய வார்த்தைகளில் உள்ளபடி நீங்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிவீர்களானால், கர்த்தர் உங்களை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அப்பொழுது நீங்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருப்பீர்கள். கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பீர்கள். கர்த்தருடைய வசனங்களில் காணப்படும் சபை அது ஒன்றே ஒன்றுதான். கிறிஸ்து உங்களோடிருந்து, உங்களை ஆசீர்வதிப்பார். நீங்கள் மரண பரியந்தம் அவருக்கு உண்மையாக இருப்பீர்களானால், உங்களுக்கு பரலோகத்தில் வாசஸ்தலம் கொடுப்பார்.

ஆகையால், இல்லாத வல்லமை தங்களுக்கு இருக்கிறதாக எண்ணி, வசனங்களுக்கு புறம்பான முறையில் பெயர்களையும், நாட்களையும் பெரிதாக எண்ணி வாழும் ஒரு வாழ்க்கை வாழாதீர்கள். நீங்கள் அப்படிச் செய்தால், நீங்களும் பரலோக பாக்கியத்தை இழந்துபோய், மற்றவர்களும் உங்களைப் போலவே, இழந்து போகக் காரணமாவீர்கள்.

தேவனுடைய வார்த்தைகளை உறுதி பண்ணும்படியாய், அப்போஸ்தலர்களுக்கு, பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமை கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று, எழுதப்பட்ட வடிவில் வேதாகமம் நம்மிடம் உள்ளது. "தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் விசுவாசம் வரும்" என்று பவுல் கூறுகிறார். (ரோம 10 : 17) இன்றைக்கு, தேவனுடைய வார்த்தைகளை உறுதி செய்ய அற்புதங்கள் தேவை யில்லை. ஏனெனில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே உறுதிசெய்யப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியாவிட்டால், ஒரு வேளை அற்புதத்தைக் கண்டாலும், நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள்.

**J.C. சோட்.**

# WORLD VIDEO BIBLE COLLEGE

**Applications are invited from committed young men for full time Bible Training**

| | | |
|---|---|---|
| **Duration** | : | 3 years (Semester System) |
| **Qualification** | : | + 2 pass or Degree |
| **Degree** | : | Bachelor of Biblical Studies |
| **Uniqueness** | : | Only Video Bible College in India. |
| **Teachers** | : | Internationally Known, Committed men of God, USA. |
| **Teaching** | : | Through Video Equipment with Interpretation |

## SCHOLARSHIP AVAILABLE

*Call or write today for prospectus and other details to*

**The Director**
**World Video Bible College**
**Dharapuram Road, KANGAYAM - 638 701**
**INDIA**
**Telephone : (04257) 20030**

பெண்கள் பகுதி

# தாயின் வல்லமை

தங்கள் குழந்தைகளின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், பண்பாடு, சமுதாயத்தில் அவர்களின் மதிப்பு போன்றவற்றை வரையறுப்பதில் தாய்மார்களுக்கு மிகமுக்கிய பங்குண்டு. சபை, சமுதாயம், நாடு இவைகளின் வீழ்ச்சியும், எழுச்சியும் பெண்களின் கையில் தான் உள்ளது என்றால் மிகையாகாது.

உண்மையான விசுவாசத்தை தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பதில் தாயை விட வல்லமையானவர்கள் ஒருவருமில்லை. ஒரு விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இளைஞன் தீமோத்தேயு இருந்ததற்கு காரணம், அவனுடைய கிறிஸ்தவ பாட்டியும், கிறிஸ்தவத் தாயும் அவன் உள்ளத்தில் ஊட்டி வளர்த்த விசுவாசம்தான். இதைக் குறித்து அப்போஸ்தலன் பவுல் கூறும்போது, "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" (II தீமோத் 1 : 5) என்கிறார். தேவனுடைய வார்த்தையை நேசித்து, வாசித்து ஜெபத்திலே உறுதியாய் தரித்திருந்து, அன்றாடம் தங்கள் பிள்ளைகளை தேவபக்தியாய் வளர்க்கும் தாய்மார்கள் அடுத்த தலைமுறையில் அவர்களை சிலுவை வீரர்களாக உருவாக்குகிறார்கள்.

கிறிஸ்தவக் குடும்பங்களின் மதிப்பை, அதின் மகிமையை தலைமுறை, தலைமுறையாக வளர்ப்பதில் தாய்மார்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். இன்றைய நாகரிக உலகில் பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகி நொறுங்கிக் கிடக்கிறது. ஆனால் கிறிஸ்தவத் தாய்மார்களால் இவ்வகையான குடும்பங்களின் நிலைமைகளை மாற்றியமைக்க முடியும். ஒரு பெண் தன் கணவன் மீது அன்பு செலுத்துதல் என்றால் என்ன, என்பதை அவள் எவ்வாறு கற்றுக் கொள்ள முடியும்? பிள்ளைகளை நேசிப்பது என்றால் என்ன என்பதை எவ்வாறு கற்றுக் கொள்ள முடியும்? தனிப்பட்ட

ஒருவரின் பரிசுத்தத் தன்மையைப் பற்றி எங்கு போய் கற்க முடியும்? அன்பைப் பற்றி எவரிடம் போய்க் கற்றுக் கொள்ள முடியும்? கணவன், மனைவி உறவு அல்லது ஒரு குடும்பத்தை அமைப்பது போன்ற காரியங்களை எங்ஙனம் அவர்கள் அறிவார்கள்? இவை யாவையும் பற்றி மிக தெளிவாக, அதிக அளவில் தங்கள் தாய்மார்களின் மூலம் மட்டுமே கற்றுக் கொள்ள இயலும். இந்த வகையாகப் பார்க்கும்போது ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் தாய்மார்களின் பங்கு முக்கியமாக இருக்கிறது.

பிள்ளைகள் தங்கள் தாய்க்கு எப்படிக் கடமைப்பட்டவர்கள் என்றும் தேவன் போதித்துள்ளார். வளர்த்தி, ஆளாக்கின உங்கள் தாயை அவர்கள் வயதானவர்களாகும்போது அசட்டை செய்யாமல் கரிசனையோடு பார்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும். ஒரு போதும் உன் தாயை சபிப்பதோ, நிந்திப்பதோ கூடாது. (நீதி 23 : 22) ஏனென்றால், இது தேவனுக்கு பிரியமில்லாத காரியம்.

அழிக்க முடியாத நன்மை, தீமை என்ற இரு தன்மைகளை தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் வைத்து விட்டுச் செல்கின்றனர். மரணபரியந்தம் அவைகள் நம்மை தொடர்ந்து வருகின்றன. கிறிஸ்தவத் தாய்மார்களுக்காக நாம் இன்றைக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் எழுந்து அவர்களை பாக்கியவதி என்றழைப்பார்களாக! நம்முடைய நன்மைக்காகவும், தேவனுடைய நாமம் மகிமைக்காகவும் தாய்மார்களின் செயல்பாடு இன்னமும் மேலோங்க தேவன்தாமே அவர்களுக்கு பெலனை கட்டளையிடுவாராக!!

இதை வாசிக்கும் தாய்மார்களே, பிள்ளைகளே, கர்த்தர் கிருபையாகக் கூட்டிக் கொடுத்த இந்தப் புத்தாண்டில் வேத வசனம் கூறும் ஆலோசனைக்கு செவிகொடுக்கும் தாயாக, பிள்ளையாக நம்மை மாற்றுவோம்! நம்மை நம்பி, நம் கையில் கொடுத்திருக்கும் குடும்பத்திற்கு உத்தரவாதம் கொடுப்போம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக! ஆமென்.

ரேச்சல் ராஜநாயகம்.

# ஏன் ஒரு கிறிஸ்தவன் ஆராதனை மற்றும் வேத வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்?

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சிந்தையும் சங்கீதக்காரனுடைய சிந்தையைப் போல் காணப்பட வேண்டும். சங் 122 : 1 "கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்."

ஆராதனை என்பது மகத்தான ஒன்று. விசேஷித்த வகையில், அவருடையவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்ட ஒன்று மரியாதைக்குரியதும் ஆகும். ஏதோ ஒரு கடினமான வாடிக்கையான ஒன்றல்ல வாரா வாரம் சலிப்போடு செயல்படுத்துவதுமல்ல.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய இருதயத்தை ஆயத்தப் படுத்தி ஆராதனை மற்றும் வேத வகுப்புகளுக்காக பக்குவப்படுத்தி வைத்தால், அந்த ஆராதனையே அவன் நித்திய ஜீவ பாதையில் தொடர்ந்து வெற்றி நடை போட ஏதுவாகும். சபையின் எல்லா ஆராதனை வேளைகளிலும் ஒரு கிறிஸ்தவன் (or) கிறிஸ்தவள் பங்கு கொள்ளத்தான் வேண்டும் (கண்டிப்பாக) என்பதற்கு பல காரணங்கள் உண்டு.

**1 தேவனை மகிமைப்படுத்த**

பவுல் சொல்லுகிறார்: கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகி உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (I கொரி 6:20).

நாம் தேவனைச் சார்ந்தவர்களாயிருந்தால் தேவனை மகிமைப் படுத்த வேண்டும். அப்படி மகிமைப்படுத்துகின்ற அநேக காரியங்களிலே ஆராதனை பிரதானமானது.

"ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் (சங் 50 : 23)

ஒருவன் மனப் பூர்வமாய் சபை ஆராதனையையோ, வேத வகுப்பையோ புறக்கணித்தால், அவன் (or) அவள் தேவாதி தேவனை மகிமைப்படுத்தக் கூடிய ஒரு விசேஷித்த வாய்ப்பை புறக்கணிக்கிறார்கள் என்று அர்த்தம்.

**2 ஒரு மாதிரியை காண்பிக்க**

இயேசு சொன்னார் "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை

மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது". மத் 5 : 16.

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய, கிறிஸ்தவளுடைய முன் மாதிரியானது அநேகரை ஆண்டவரிடத்தில் இழுக்க பெரிதும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. மனப்பூர்வமாய் ஆராதனையை அலட்சியப்படுத்துவது அநேகரை ஆண்டவரிடத்தில் இழுக்காது மாறாக அநேகரை ஆண்டவரிடத்திலிருந்து துரத்தும். எச்சரிக்கை நீ அதற்கு காரணமா? யோசித்துப்பார்.

இயேசு சொன்னாரே" இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும் (மத் 18 : 6) இது பலவீனமான சபை உறுப்பினருக்கும் கிறிஸ்தவனாயிராதவர்களுக்கும் இடறல் ஆகிறது. ஆராதனையையோ, வேத வகுப்பையோ புறக்கணிக்காதீர். புறக்கணிப்பவர் கழுத்து எந்திரக் கல்லுக்கு ஏற்றதாயிருக்கிறது.

**3 ஆவிக்கேற்றபடி தான் வளர தனக்குதவியாயிருக்க**

வேதாகமம் கட்டளையிடுகிறது" நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் II பேதுரு 3 : 18.

ஆராதனையில், வேத வகுப்பில் பங்கு கொள்ளுதல் என்பது ஆவிக்குரிய நிலையில் வளருவதற்கு வாஞ்சையாயிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் பொருள், பவுல் சொல்லுகிறார். "விசுவாசம் கேள்வியினாலும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலும் வருகிறது. (ரோமர் 10 : 17) கர்த்தருடைய வார்த்தையின்றி வரும் விசுவாசம் எதுவும் இரட்சிப்புக்கேற்றதல்ல. (உ.ம்) இஸ்ரவேலர்கள் I சாமு 4 : 12

சாமுவேலின் காலத்தில் நடைபெற்ற யுத்தத்தில் (பெலிஸ்திய ரோடு) 4000 பேர்களை இஸ்ரவேலர் இழந்தனர். மூப்பர்களோடு தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்த போது உடன்படிக்கைப் பெட்டியை பாளையத்துக்குள் கொண்டு வரலாம்., அதனால் (உடன் படிக்கைப் பெட்டியினால்) எதிரிகள் கரத்திலிருந்து நாம் காப்பாற்றப் படுவோம் என்றனர். அப்படியாக யுத்தம் நடைபெற்ற போது முந்தியதைவிட பிந்திய யுத்தம் மிகவும் மோசமானது. 30,000 இஸ்ரவேலர் கொல்லப்பட்டார்கள். இன்னும் மோசமாக உடன்படிக்கை பெட்டியை எதிரிகள் பிடித்துச் சென்றனர் (I சாமு 4 : 4– 11).

இஸ்ரவேலர்களுக்கு ஒன்றுமே புரியாத ஒரு குழப்பம் ஏற்பட்டது. உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வந்தும் வெற்றி கிடைக்கவில்லையே ஏன்? அவர்கள் ஒரு காரியத்தை மறந்துவிட்டனர். உடன்படிக்கை பெட்டியினாலல்ல அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதலினாலேயே வெற்றியை தேவன் கட்டளையிட்டிருக்கிறார். (யாத் 23: 20-33.) ஆனால் இந்த இஸ்ரவேலர் தங்களுடைய எதிரிகளுக்கு முன்பாக இந்த உடன்படிக்கைப் பெட்டியை ஒரு தாயத்தைப் போல் பயன்படுத்துகிறார்கள். தேவன் ஒரு போதும் இப்படி செய்கிறவரல்ல தேவன் சொன்னதை விசுவாசித்து கீழ்ப்படிதலே வெற்றி. அவனே ஆவிக்குரிய நிலையில் வளருவான். தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக் கொள்ளுதல், துதித்தலோடு பாடுதல், ஜெபிப்பது, கர்த்தருடைய திரு விருந்தில் பங்கு கொள்ளுதல், கொடுத்தல் இவைகள் யாவுமே இந்த காரியங்களில் பங்கு கொண்டு இவைகளை செயல்படுத்தும் போது ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பலப்படுத்துகிறது.

தேவப் பிள்ளைகள் கற்று தேர்ச்சியுடைய அநேக வாய்ப்புகள் கொடுக்கப்படுகிறது. தேவ வார்த்தையை அலட்சியப்படுத்துகிற எந்த ஒரு சபையையும் சபிக்கப்பட்ட ஒரு நிலையில்தான் கிடக்கும் “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் அழிந்து போகிறார்கள் (ஓசியா 4 : 6) என்று தேவன் சொல்லுகிறார். நல்ல வேதாகம அறிவு ஒவ்வொரு கிறிஸ்தவனையும் வளரச் செய்யும் அறிவில்லாத நிலை வளர்ச்சிக்கு தடைசெய்யும்.

**4. இறுதியாக நற்கிரியை செய்ய உன்னை ஒப்புக் கொடுக்க:**

ஒரு கிறிஸ்தவன் நற்கிரியை செய்வதில் ஐசுவரியவனாக (நிறைவானவனாக) இருத்தல் வேண்டும். பவுல் சொல்லுகிறார் “தேவனை விசுவாசிப்பவன் நற்கிரியைகள் செய்வதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (தீத்து 3 : 8) அப்படி செய்வதின் மூலம் பிதாவை மகிமைப்படுத்தி, மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் ஜீவித்து, தன்னில் தானே ஆவிக்குரிய நிலையில் வளர்ந்து, நற்கிரியைகளை செய்ய தகுதிப்படுத்தி, நித்திய ஜீவனுக்குள் பங்கடைபவனே - பாக்கியவான். இவைகள் யாவையும் ஆராதனையில் - வேத வகுப்பில், நிறைவாய்ப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆராதனை ஒரு தாயத்தல்ல
ஆராதனை ஒரு கசப்பான அனுபவமல்ல்
ஆராதனை மகிழ்ச்சியானதும், மனநிறைவானதும் ஆகும்.
மீண்டும் வாசிப்போம். (சங்122 : 1)

**தானியேல் துரைராஜ்**, திருச்சி

# ஓசியா தீர்க்கதரிசன புத்தகம்

| | |
|---|---|
| பொருள் | : இரட்சிப்பு |
| காலம் | : கி.மு. 750 |
| விவாதப் பொருள் | : தேவன் அன்பாக உள்ளார். |
| யாருக்கு? | : இஸ்ரவேலருக்கு. |
| சிறப்பு | : வடக்கு இராஜ்ஜியத்தில் எழும்பிய ஒரே எழுதும் தீர்க்கதரிசி. |

**புறக் குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| I. | இஸ்ரவேலின் விபச்சாரம் | 1-3 | அதிகாரங்கள் |
| II. | இஸ்ரவேலின் தேவபயமற்ற நிலையும் தண்டனையும் | 4-13 | அதிகாரங்கள் |
| III. | இஸ்ரவேலின் மனமாற்றமும், மன்னிப்பும் | 14 | அதிகாரம் |

**இது தரும் பாடங்கள்**

1) தேவன் மற்றும் அவருடைய பிரமாணங்கள் பற்றிய அறிவு இல்லையானால், அவருடன் ஐக்கியம் காண முடியாது.

2) திருமண உறவின் பரிசுத்தம்.

3) ஒழுக்க ரீதியாக, நல் முடிவெடுக்கும் மனிதனின் நாடி நரம்புகளை பாவம் அழித்துப் போடுகிறது.

4) ஒரு தேசத்திற்கு, வெளியிலிருக்கும் எதிரிகளை விட, உட் சீரழிவே அதிக ஆபத்தானது.

5) பாவம் என்னும் வேரிலிருந்து முளைக்கும் எதுவும் தேவனுக்கு விரோதமானதே.

# வேதாகமம் தேவனுடைய வசனமென்று நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டும்

உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களும் வேதாகமம் தேவனுடைய வசனம் என்று விசுவாசிக்கின்றனர். இதைக் குறித்து சந்தேக கேள்வி கேட்காது, அனைத்தும் உண்மையென ஒப்புக் கொள்கின்றனர். வேறு சிலர் அதன் உள்ளடக்கத்தையும், அதன் கனிகளையும் ஆராய்ந்தறியாமல் அதைப் பரியாசம் செய்கின்றனர். இன்னும் சிலர் வேதாகமத்தை முழுமையாக புறக்கணிக்கின்றனர், ஏனெனில் இவ்வுலகில் அவர்கள் பிறந்தது முதல் வேறு எதையோ ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் வளர்க்கப்பட்டு விட்டனர். நீங்கள் பின் குறிப்பிடப்பட்ட இரண்டில் ஏதாவது ஒரு வகையைச் சார்ந்தவராயின், பிறகு நீங்கள் ஏன் வேதாகமத்தை தேவனுடைய வசனம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு சுருக்கமான சில காரணங்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

1. வேதாகமம் (தனக்குத்தானே) தேவனுடைய வசனம் என்று இயம்புகிறது. (எரேமியா 14 : 1). பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள் என்று பேதுரு சொன்னார். (II பேதுரு 1 : 20, 21). கிறிஸ்து பழைய ஏற்பாட்டை தேவ வசனம் என்று அடிக்கடி குறிப் பிட்டார் (யோவான் 10 : 35). இறுதியாக, அவைகள் அனைத்தும் தேவ னால் அருளப்பட்டவை என்று பவுல் குறிப்பிட்டார். (II தீமோ. 3 : 16–17).

2. வேதாகமம் உண்மை விஞ்ஞானத்தோடு ஒத்துப் போகிறது. பூமி உருண்டை என்றும், கடலில் வழி உண்டாயிருக்கிறது என்றும், இன்னும் நூற்றுக்கணக்கான உண்மைகளும், மனிதனால் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பே, வேதம் அதைச் சொல்லிற்று. (ஏசாயா 40 : 22) (சங். 8). அவ்வளவு முந்தைய காலத்தில் வேதாகம எழுத்தாளர்கள் எப்படி இதை அறிந்திருந்தனர்? தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

3. வேதாகமத்திற்கு அநேக புதைபொருள் ஆராய்ச்சிகள் ஆதாரமாக உள்ளன. இப்படிப்பட்ட கண்டுபிடிப்புகள் கிறிஸ்துவின் பிறப்பிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேதத்தில் முன்னுரைக்கப் பட்டவை. ஜலப்பிரளயம் போன்ற சரித்திர உண்மைகளை சிலர் சந்தேகிக்கின்றனர். ஆனால் 1872–ல் ஜார்ஜ் ஸ்மித் என்பவர்

பாபிலோனிய கண்டுபிடிப்புகள் ஜலப்பிரளயம் குறித்து உறுதிப் படுத்துகிறது. இப்படி அநேக உதாரணங்களை கொடுக்க இயலும்.

4. வேதாகமும் பூகோளமும் கூட ஒத்துப்போகின்றன. இன்றுள்ள அநேக மலைகள், ஆறுகள், பட்டணங்கள் ஆகியவற்றின் பெயர்கள் அன்று வேதாகமத்திலும் கூறப்பட்டவை. இவைகள் வேதாகமத்தில் ஏதோ கற்பனை பெயர்களாக கொடுக்கப்பட்டவைகள் இல்ல என்பதையும் உண்மையில் அவைகள் இருந்தவைகள் என்பதையும் இது காட்டுகிறது.

5. வேதமும், உலக வரலாறும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ளன. உதாரணமாக, உலக வரலாற்றில் நடந்தவையாக கூறப்படுகிற சில சம்பவங்கள், வேதாகமத்தில் வாசித்துப் பார்த்தால் அவைகள் வேதாகம வரலாறாக், இருப்பதையும் காணலாம். வேதாகமம் ஒரு கட்டுக் கதையாயின், இது எப்படி சாத்தியமாகும்?

6. வேதாகமம் மனிதர்களால் தனித்து எழுதப்பட்டிருக்க இயலாது, ஏனெனில் இதன் பெரும்பகுதி மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை. மனிதன் தனித்து எழுதியிருந்தால், இத்துடன் பிறர் எழுதினவைகள் ஏன் இதற்கு சமமாக இருப்பதில்லை? மேலும் மனிதர்கள் தனித்து இதை எழுதியிருந்தால், இதைக் காட்டிலும் மேலான புத்தகங்கள் இன்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

7. வேதாகமப் புத்தகங்கள் (ஒன்றுக்கொன்று முரண்படாத) ஐக்கியத்தை கொண்டவை. வித்தியாசப்பட்ட 40 எழுத்தாளர்களைக் கொண்டு, 1600 வருட காலத்தில் வித்தியாசப்பட்ட தொழில் செய்தவர் களைக் கொண்டு, வித்தியாசப்பட்ட இடங்களில் இருந்து கொண்டு, ஒரு முழுமையான இசைவுபெற்ற புத்தகமாக பொருந்துகிறது. முழு வேதாகமத்தையும் எழுதுவதற்கு ஏதுவாக தேவனால் வழி நடத்தப்படாதிருந்தால், இது எப்படி சாத்தியமாயிற்று?

8. வேதாகமத்தில் அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப் பட்டதையும், அவைகளின் நிறைவேற்றத்தையும் காணுகிறோம். உதாரணமாக, யோவேல் 2 : 28 – 29ல் கர்த்தருடைய ஆவியானவர் எப்பொழுது ஊற்றப்படுவார் என்பதை அதன் எழுத்தாளர் பேசுகிறார். பிறகு அப்போஸ்தலர் 2ல், பேதுரு குறிப்பிடும் பொழுது, அப்பொழுது (பெந்தகோஸ்தே நாளில்) நிகழ்ந்த சம்பவம் யோவேல் தீர்க்கதரிசியால்

முன்னுரைக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டுகிறார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவை குறித்து அநேக தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கப்பட்டன. அவைகள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறின. ஏசாயா 53 : 5 மற்றும் லூக்கா 22 : 63, 64 ஐ வாசிக்கவும்.

9. பல பரீட்சைகள் நேரிட்ட நேரங்களிலெல்லாம், வேதாகமம் உறுதியாக நிலைத்திருந்த செயல், அது தேவனுடைய வார்த்தைகள் என்பதை காட்டுகிறது. அதற்கு விரோதமாக அநேக பகைஞர்கள் இருந்தும், அது நிலை பெற்றிருந்தது. நூற்றாண்டுகளினூடே அது பாதுகாக்கப்பட்டு வந்தவை. ஒருவேளை இன்றைய மொழி பெயர்ப்புகளை பூர்வீக (மூல)ப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அது ஒரே நிலையில் நிலைத்திருப்பதைக் காணக்கூடும்.

10. வேதாகமம் மனிதன் பற்றிய எல்லா கேள்விகளுக்கும் பதில் அளிக்கிறது. மனிதன் எங்கிருந்து வந்தான்? அவனுடைய இவ்வுலக வாழ்க்கையில் அவனது நோக்கமென்ன? (மரணத்திற்குப் பிறகு) அவன் எங்கே செல்கிறான்? இவைகளுக்கு வேதாகமம் மட்டுமே பதிலளிக்கிறது. மனுஷர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள். (ஆதி. 1 :26, 27). அவனுடைய வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்துவதே அவனது நோக்கம். ( I பேதுரு 4 : 11), உறுதியாக அவன் எங்கோ ஓரிடத்தில் நித்தியத்தை கழிக்கப் போகிறான். (மத்தேயு 25 : 46).

11. மனிதர்கள் எழுதும் புத்தகங்கள் எந்த அளவுக்கு தீமையை உண்டாக்குகிறதோ அவ்வளவுக்கும் நன்மை பயக்கும் வகையில் வேதாகமம் மிகப் பெரும் செல்வாக்கு பெற்றுள்ளது.

12. வேதாகமம் ஒருபோதும் ஒழிந்துபோகாது என்று கிறிஸ்து குறிப்பிட்டார். (யோவான் 12 : 48).

எனவே, வேதாகமம் உண்மையாகவே தேவனுடைய வார்த்தை, அது தேவனிடத்திலிருந்து மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. அது சத்தியமாயும், பூமியிலிருந்து பரலோகத்திற்கு வழிகாட்டியாகவும் உள்ளது. விசுவாசியுங்கள், அதன் போதனைகளுக்கு கீழ்ப்படியுங்கள், அதன் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள். எனவே உண்மையாகவே, நீங்களும், வேதாகமம் தேவனுடைய வசனம் என்று விசுவாசியுங்கள்.

# ஆவியின் கனி

## நீடிய பொறுமை

தற்போதுள்ள உலகத்தின் போக்கில் ஒருவன் பொறுமையாய் இருப்பது இயலாத காரியமாக தோன்றுகிறது. தீமையினால் நிறைந்திருக்கும் மனித சமுதாயத்தில் ஒருவன் பொறுமையாய் இருந்தால் பிழைக்க தெரியாதவன் என்று அவனை கேலி பேசும் சமுதாயம். அவன் தனக்கு நேரிட்ட சம்பவத்தினால் ஆத்திரம் அடைந்து ஏதேனும் செய்துவிட்டால் சற்று பொறுமையாய் இருந்திருக்கலாமே ஏன் இப்படி செய்துவிட்டாய்? என்று அவன் மீது குற்றம்சாட்டும் இந்நிலையில் ஒருவர் கூடுமானவரை பொறுமையாய் இருப்பதே அவசியம்.

உலகத்தில் மனிதனாக பிறந்தவன் உபத்திரவம் இல்லாமல் வாழ்வது அரிது. அனேகர் உபத்திரவங்களை சகிக்க இயலாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து, தம்மை நேசிப்பவர்களை இவ்விதமான நிலைக்கு செல்லவிடாமல் அனேக உண்மைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை தேற்றகூடியவராய் இருக்கிறார். இயேசு தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களை பார்த்து "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். (யோ 16 : 33). அப்போஸ்தலனாகிய பவுலும் பர்னபாவும், இயேசுவை பின்பற்றினோருக்கு ஏற்பட்ட உபத்திரவங்களில் அவர்களை சந்தித்து "நாம் அனேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று புத்திசொல்லி அவர்களின் மனதைத் திடப்படுத்தினார்கள். (அப் 14 : 22) ஒரு மனிதனுக்கு உபத்திரவம் பல வழிகளிலும் ஏற்படலாம். உபத்திரவங்கள் ஏற்படும்போது அவன் தன் நிலையை இழக்காமல் இருப்பது நன்று. பொறுமை கடலினும் பெரிது என்றும் பொறுத்தவன் பூமியை ஆள்வான், பொங்கினவன் காடாள்வான் என்றும் கூறுவார்கள். ஒருவன் தன் வாழ்க்கையை பயனுள்ளதாய் காத்துக்கொள்ள பொறுமை மிகவும் அவசியம். பொறுமை ஒருவனின் வாழ்வில் தானாக ஏற்படுவதில்லை. அதை அவர் கற்றுக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். எனவே ஒருவன் பொறுமையை கற்றுக் கொள்ள அவன் வாழ்வில் உபத்திரவங்கள்

ஏற்படுவது அவசியமாக தோன்றுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் (ரோ 5 : 3)ல் "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் என்று கூறுகிறார்.

உபத்திரவங்கள் ஏற்படும்போது கோபமடையாமல் பொறுமையாய் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். உபத்திரவமான நேரங்களில் பொறுமை அவசியமுள்ளதாயிருக்கிறது. எனவே ஒருவன் பொறுமையை கற்றுக் கொள்ள உபத்திரவங்களில் பொறுமையாயிருந்து வெற்றியடைந்த வர்களின் வாழ்க்கையின் மாதிரியை நோக்கி பார்க்க வேண்டியது அவசியம். நாம் பொறுமையை கற்றுக் கொள்ளும்படிக்கு வேத வசனங்கள் எழுதப்பட்டுள்ளது. தேவ வசனத்தினால் பொறுமை மட்டுமல்ல ஆறுதலும் ஏற்படும்படி, உபத்திரவங்களை சகித்து பாவம் செய்யாமல் தங்களை காத்துக் கொண்ட தேவதாசர்களின் வாழ்க்கை நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். (ரோ 15 : 4).

தேவதாசனாகிய யோபு என்னும் மனிதன் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனு மாயிருந்தான். அவனைப் போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்று கர்த்தரே சாட்சி கூறினார். ஒரு நாள், ஒரு ஆள் அவனிடத்தில் வந்து உம்முடைய எருதுகளையும் கழுதைகளையும் கொள்ளை கொண்டு போனார்கள் என்று அறிவித்தான், வேறொருவன் வந்து வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது என்றும், வேறொருவன் வந்து கல்தேயர் வந்து ஒட்டகங்கள் மேல் விழுந்து அவைகளை ஓட்டிக் கொண்டு போனார்கள், வேலையாட்களையும் வெட்டிப் போட்டார்கள் என்று பேசிக் கொண்டிருக்கையில் வேறொருவர் வந்து உம்முடைய குமாரரும், குமாரத்திகளும் இருந்த வீடு இடிந்து பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள் என்று அறிவித்தபோது அவன் அதை கேட்டு தரையிலே விழுந்து பணிந்து, "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்" (யோபு 1 : 21) இந்நிலையில் அவன் சரீரம் முழுவதும் கொடிய பருக்களால் நிறைந்து மிகுந்த உபத்திரவம் ஏற்பட்ட போதிலும் அவன் கோபம் கொள்ளாமலும், மனம் பதறாமலும், 'தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றுகூறி பொறுமையாய் இருந்து

பாவம் செய்யாமல் தேவனை மகிமைப்படுத்தி பொறுமையின் பலனாக இரட்டிப்பான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டான்.

உத்தமரான தேவகுமாரன் இயேசுவை விசாரித்தவன் இவரிடத்தில் நான் ஒரு குற்றமும் காணவில்லை என்று கூறின பின்பும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். வாரினால் அடித்தார்கள் முள்முடியை சிரசின் மீது வைத்து அழுத்தினார்கள்; பரியாசம் பண்ணினார்கள், அவர் மேல் துப்பினார்கள், கசப்பு கலந்த காடியை கொடுத்தார்கள், அவருடைய கரங்களும் கால்களும் ஆணிகளால் கடாவப்பட்டது. " . . . அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயை திறவாதிருந்தார்" (அப். 8 : 32) அவர் தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றுபவராக " . . . தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவ னுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12:2).

தேவகுமாரனாகிய இயேசுவுக்கும், மற்றும் யோபுவுக்கும் ஏற்பட்ட உபத்திரவம் உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டதுண்டா? இவ்வுலகத்தில் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டுள்ள வாழ்க்கை என்னும் ஓட்டத்தில் அவனுக்கு ஏற்படும் உபத்திரவங்களில் பொறுமையாய் இருந்து வெற்றியடைய, இயேசுவையே நோக்கி பார்த்து, உபத்திர வங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் என்று எபிரேய எழுத்தாளன் கூறுகிறார். (எபி 12 : 1–3).

இயேசு கிறிஸ்துவின் பொறுமையினால் பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழும் எல்லாருக்கும் மீட்பை ஏற்படுத்தினார். பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பவர்களை மீட்க வேண்டும் என்பதற்காக தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தும் மனந்திரும்பாமல், பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்துள்ள மனித சமுதாயமும் அவர்களை சுமக்கும் இந்த உலகமும் அழியாமல் இருப்பதற்கும் காரணம் மனிதனின் பாவம் நிறைந்த வாழ்க்கையை சகித்து கொண்டு எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் நம்மேல் நீடிய பொறுமையாய் இருப்பதால்தான் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். (II பே 3 : 9).

இதை வாசிக்கின்ற நண்பரே ஆவியின் கனியான நீடிய பொறுமை நம்மிடத்தில் உண்டா? அதன் மூலம் யாருக்காவது ஏதாவது நன்மை ஏற்பட்டுள்ளதா? சிந்தித்து பார்ப்போம்! நம்முடைய பொறுமை

மற்றவர்களுக்கு பயனுள்ளதாகவும், நம்மை உண்டாக்கின தேவனுக்கு மகிமையாகவும் இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமை யோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார்" அவர் இப்பொழுதும் நீடிய பொறுமையாய் இருப்பது போல நாமும் நீடிய பொறுமையை கற்றுக் கொள்ள அவரையே நோக்கி பார்ப்போம்.

"தேவ கிருபை உங்களோடிருப்பதாக"

**ஹென்றி மோகன், நீல்கிரீஸ்.**

# ஊழியர்கள் கவனத்திற்கு

**காங்கயத்தில் உள்ள உலக வீடியோ வேதாகமக் கல்லூரிக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டுள்ளது.**

**உங்களது பிராந்திய சபையில் பட்டம் பெற்ற (அல்லது) +2 தேறின விசுவாசமும், ஊழிய வாஞ்சையுமுள்ள திருமணமாகாத இளைஞர்கள் இருந்தால் உங்கள் சிபாரிசோடு விண்ணப்பிக்கச் சொல்லுங்கள்.**

**மிகக் குறைந்த மாரணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர். முந்துங்கள்.**

*பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்து*
*சேர வேண்டிய கடைசி நாள் 2-2-98*

*இயக்குநர்*
**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**
*தபால் பெட்டி எண்.* - 27
*காங்கயம்* - 638 701.

# பாதுகாப்பு

உலக நாடுகள் ஒவ்வொன்றும் இன்றைய சூழ்நிலையில் நாட்டிற்கு பாதுகாப்பு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வல்லரசு நாடுகள் பாதுகாப்பிற்காக கோடி கணக்கிலே பணத்தை ஒதுக்கி செலவு செய்து கொண்டிருக்கிறது. சில நேரங்களில் அந்தப் பாதுகாப்பையும் மீறி சமூக விரோதிகள் நாட்டிற்குள் நுழைந்து பேரிழப்புகளை ஏற்படுத்திவிடுகிறார்கள். போர் காலத்திலே இராணுவ வீரர்கள் பதுங்குகுழிகளை அமைத்து அதிலே பாதுகாப்பாய் இருக்கிறார்கள். ஒரு முயல் ஆபத்து காலத்திலே ஒரு வலைக்குள் பாதுகாப்பை பெறுகிறது. உலகத்திலே வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் பாதுகாப்பு மிகவும் அவசியமாயிருக்கிறது. பாதுகாப்பு இல்லாத மனிதனும் ஒருவனும் கிடையாது. ஆபத்து காலத்திலே ஒவ்வொரு மனிதன் பாதுகாப்பைத் தேடி ஒளிந்து கொள்ளுகிறான். ஆனால் ஒரு கிறிஸ்தவன் ஆபத்து தன்னை சூழ்ந்து கொள்ளும் போது அவன் எங்கே பாதுகாப்போடு ஒளிந்து கொள்ள வேண்டும்?

ஆனால் தாவீது இதை நன்றாய் அறிந்திருந்தார். 31–ம் சங்கீதத்தை அவர் எழுதும் போது அவரது மோசமான சூழ்நிலைகளையும் அவரை நெருங்கி வந்த ஆபத்து நாட்களையும் நினைவுபடுத்தி, ஆபத்து காலத்திலே அவருக்கு அடைக்கலம் யார் என்பதைக் குறித்து திட்டவட்டமாக சொல்கிறார். அவரது எதிரிகள் அவரை விரட்டி வந்தார்கள். நண்பர்களோ கைவிட்டுவிட்டார்கள். அவர் நிலைமை அபாயகரமானதாகவே இருந்தாலும் கூட அவர் பாதுகாப்பு இல்லாமல் இல்லை.

தேவனே சிறந்த ஆதாரம் என்றும், அவரோடு சரியான உறவு கொண்டிருப்பதே ஞானமுள்ள பாதுகாப்பு என்றும் அவர் அறிந்திருந்தார். ஆகவே தான் சொல்கிறார் தேவனே எனக்கு கன்மலையும் கோட்டையும், அடைக்கலமுமான அரணுமாயிருக்கிறார் என்கிறார் (வச 2.3) அவர் தேவன் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். தனது எதிரிகளின் தாக்குதல்களுக்கு நடுவிலும் அவர் பாதுகாப்பை பெற்றிருந்தார்.

இந்த பாதுகாப்பு உணர்வு கல்லறைக்கு அப்பாலும் நம்மை தாங்கிச் செல்லக் கூடியது.

முரடன் ஒருவனால் அச்சுறுத்தப்படும் போது எப்படி ஒரு சிறுவன் தன் மூத்த சகோதரனை அழைத்து அதில் நம்பிக்கையை பெறுகிறானோ அப்படியே தாவீதும் எதிரிகள் தன்னை அச்சுறுத்தும் போது அவர் தேவனை அழைத்து நம்பிக்கையைப் பெற்றார். அவர் தேவனோடு வாழ்ந்தபடியால் ஏற்கனவே பலமுறை அவருக்கு உதவி செய்தவரும் மாறாத அன்பினால் அவரை நேசிக்கிறவருமான தேவனுடைய பாதுகாப்பில் தன்னை ஒளித்துக் கொண்டார். ஆகவேதான் உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (வச. 5) என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று சொல்லி நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொல்லி அசைக்க முடியாத ஒரு மாபெரும் நம்பிக்கையோடு தேவ பாதுகாப்பில் அவர் இருந்தார் (வச. 14–15).

தாவீது சொன்ன அதே வார்த்தைகளை நாம் சொல்லி தேவ பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சில கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவன் மீது அளவற்ற நம்பிக்கை வைத்துக் கொண்டு இருந்தாலும்கூட, தங்களை மரண பயமோ, அல்லது பயங்கர பிரச்சனைகளோ, பிசாசின் சோதனைகளோ ஏற்படும் போது மனமுடைந்து பின் வாங்கிப் போய்விடுகிறார்கள். நாம் தேவனுடைய பாதுகாப்பில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடுகிறார்கள். அத்தகைய மக்களுக்கு தாவீதின் இந்த வார்த்தைகள் இத்தகைய பயங்களை போக்குகிறதாயிருக்கிறது.

முதல் நூற்றாண்டிலே அப்போஸ்தலர்களுக்கு நேரிட்ட போராட்டங்கள் உபத்திரவங்கள், எதிர்ப்புகள், சிறைச்சாலைவாசம், எதிரிகளின் கண்மூடித்தனமான தாக்குதல் இவைகளை ஒரு கனம் சிந்தித்து மனக்கண்முன் நிறுத்தும்பொழுது சரீரம் முழுவதும் சிலிர்த்துவிடுகிறது. அதைக் குறித்து பவுல் சொல்வதைக் கேளுங்கள். ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்று அவர் எங்களை தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். (II கொரி 1 : 8 – 9 – 10).

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மரிக்கின்ற நேரத்திலே பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். (லூக் 23 : 46) என்று தன்னை முற்றிலுமாக தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்ததினாலே கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுந்தார். அது மாத்திரமல்ல. அவர் இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுதுகூட தேவ பாதுகாப்பில் வாழ்ந்தார். பயங்கரமான எதிர்ப்புகள் மத்தியிலும் அவர் நம்பிக்கையோடு இருந்தார். நாமும் தேவனுடைய வல்லமையான கரங்களில் எப்பொழுதும் பாதுகாப்போடு இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

தேவன் உண்மையுள்ளவர்களையும் பயபக்தியுள்ளவர்களையும் பாதுகாப்பார் என்று கூறுகிறார் (வ. 23) வாழ்வில் மட்டுமின்றி மரணத்திலும் அவர் நம்மை பாதுகாப்பார் என்ற எண்ணம் நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும். வாழ்விலும் மரணத்திலும் தேவனே நமது கோட்டை. ஆபத்து இருப்பதினால் பாதுகாப்பு என்றில்லை. தேவ பிரசன்னம் இருப்பதினாலேயே பாதுகாப்பு இருக்கிறது.

**யோசுவா செல்வம்,** அரக்கோணம்.


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.15/-

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
**தபால் பெட்டி எண் 27, காங்கயம்-638 701.**

*குறிப்பு : தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# தேவனின் எச்சரிப்பு

அப்போ 3 : 22, 23 மோசே பிதாக்களை நோக்கி உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்ப பண்ணுவார் அவர் உங்களுக்கு சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்கு செவி கொடுப்பீர்களாக. அந்த தீர்க்கதரிசியின் சொல் கேளாதவனோ அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் (அந்த தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்து அவருடைய உபதேசங்களையும், கற்பனைகளையும் கேட்டு கீழ்படியாதவன் நிர்மூலமாக்கப்படுவான்.

லூக்கா 7 : 29, 30 யோவான் ஸ்நானகன் உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் யோவான் ஸ்நானகனாலே ஞானஸ்நானம் பெற்று தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமோ அவரால் ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்கு கேடுண்டாக தேவனுடைய யோசனையை தள்ளி விட்டார்கள். அன்றுபோல் இன்றும் அநேகர் தங்களுக்கு கேடுண்டாக ஞானஸ்நானத்தை அற்பமாக எண்ணி தள்ளிவிடுகிறார்கள்.

மாற்கு 16 : 15, 16 இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் சீஷர்களுக்கு கொடுத்த கட்டளை நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாக தீர்க்கப்படுவான். ஞானஸ்நானம் தேவனுடைய நீதி என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய நீதியை நிறைவேற்ற அசட்டை யாயிராதீர்கள்.

II தெசலோ 1 : 7, 8 தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்இற்கு கீழ்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். இன்றும் அநேகர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அத்துடன் பிடிவாதமாகவும் இருக்கிறார்கள்.

எபிரேயர் 2 : 4 அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி

பகிர்ந்து கொடுத்த பரிசுத்த வரங்களினாலும் தேவன் தாணே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு மனம் திரும்பி ஞானஸ்நானம் பெறும்பொழுது இரட்சிக்கப்படுகிறோம். ஞானஸ்நானம் பெறாதவர்கள் இரட்சிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியானவராலும் முத்திரையிடப்படவில்லை.

எபிரேயர் 3 : 12. சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவ்விசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். இது கிறிஸ்தவர்களுக்கும், ஞானஸ்நானம் பெறாமல் கிறிஸ்துவை விட்டு விலகுகிறவர்களுக்கும் உரிய எச்சரிக்கை.

மத்தேயு 7 : 21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. பிதாவின் சித்தட என்ன? அவருடைய உபதேசங்களுக்கு கீழ்படிவதாகும். உபதேசத்திற்கு கீழ்படியாதவர்கள் பிதாவை கனவீனம் செய்கிறவர்கள். அகங்க.ரக்காரர்கள்.

**ஞானம், மலேசியா.**

# ஜெபியுங்கள்

கர்த்தருக்குச் சித்தமானால் எதிர் வரும் 9-2-98 அன்று **"உலகவீடியோ வேதாகமக் கல்லூரியின்"** ஆண்டு விழாவும், **திருமறை ஆசானின்** நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. செல்வநாயகம் அ ர்களின் "ஆசிரியர் உரை"ப் பகுதிகளை தொகுத்து வெளியிடப் படும் **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற சுமார் 250 பக்கங்கள் கொண்ட புத்தகத்தின் நூல் வெளியீட்டுக் கூட்டமும் நடைபெற உள்ளது.

எல்லாம் தேவ சித்தத்திற்கு இசைவாகவும், அவருடைய நாம மகிமைக்கு ஏற்றதாகவும் நடைந்தேற ஜெபியுங்கள்.

**ஆசிரியர்**

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, ஜனவரி
ஜனவரி THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030